# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,686—1966 මාර්තු 11 වැනි සිකුරාදා—1966.3.11**

14,686 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு மாச்சு மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரகரிக்கப்பட்டது)**


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 47 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 51 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, அவரால் ஆக்கப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1965 ம் ஆண்டு பெப்புருவரி மீ 6 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

**கட்டளை**

1964, ஒகஸ்ட் 7 இன் 14,135 ஆம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட, மட்டக்களப்பு மாவட்டத்து கோறளைப் பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கோறளை மத்திய கிராமப் பிரதேச உட் பிரிப்புக் கட்டளையில் சொல்லப்படும் பிரிப்பை செயற்படுத்துதற்கு வேண்டிய விடயங்களுக்கு, இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள முறையில், இத்தால், ஏற்பாடு செய்யப்படுகின்றது.

அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அப் புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்படக்கூடிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையை அடுத்தமைந்ததாக இருக்கும்.

2. 1965, ஜனவரி 31 இல் நடைமுறையிலிருக்கின்றபடியான, பழைய கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினாலாக்கப்பட்ட துணைவிதிகள் யாவும், இத்துணைவிதிகள் அந்தப் புதிய கிராமப் பிரதேசத்தை சம்பந்தப் படுத்துகின்றவரையில் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கவேண்டியதுடன், அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டிருப்பனவாகக் கருதப்படவும் வேண்டும்.

3. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பொது நிதியின் வரவிலுள்ள தொகை, 1965, பெப்புருவரி 1 இல் பங்கிடப்பட்டு, வாழைச்சேனை, ஓட்டைமாவடி ஆகிய கிராமப் பிரதேசங்களொவ்வொன்றினதும் கிராமச்சபையின் பொதுநிதியில் முறையே 9 : 16 விகிதத்தில் வரவுவைக்கப்பட வேண்டும்.

4. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கீழ்க் காணும் அசைவுள்ள சொத்து, 1965, பெப்புருவரி 1 இல் ஓட்டைமாவடிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டியதுடன் ; பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் எஞ்சியுள்ள அசைவுள்ள சொத்து புதிய வாழைச்சேனைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படவும் வேண்டும் :—

2 எழுத்து மேசைகள்
1 அலுமாரி
1 கேள்விப்பத்திரப் பெட்டி
1 புத்தக ஏந்தானம்
3 தட்டுகள்
8 புதிய கைபிடி நாற்காலிகள்
5 பழைய நாற்காலிகள்
4 குப்பைவாரிகள்.
ஓட்டைமாவடியிலுள்ள பிரசவ, சிசு சேம நல நிலையத் தளபாடங் களும் சாதனங்களும்.
முறையே ஓட்டைமாவடியிலும் மீராவோடையிலுமுள்ள சனசமூக நிலையங்களின் தளபாடங்களும் புத்தகங்கள், பத்திரங்களும்.

### முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித் தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறுவேண்டப்படுகிறது.

---

இத்தால் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக **இலங்கை அரசாங்க வர்த்தமானியின்** விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக் கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் ஒற்றைப்பந்தி அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் ரூபா 10 ம் என்பதற்குப் பதில் **ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 15,** வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு பெப்புருவரி மீ 11 ந் உ.

**பேர்னுட் டி சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

5. 1965, ஜனவரி 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி, கட்டடம், அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும், 1965, பெப்புருவரி 1 இல், அந்தக் காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து இருக்கும் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், அவை புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றோடும் சம்பந்தப்படுகின்றவரையில், 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்த புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குக் கையளிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

7. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் கந்தோரில் வைத்துப் பேணப்பட்ட கோப்புகள், காகிதங்கள், பத்திரங்கள் யாவும், அவை புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றோடும் சம்பந்தப்படுகின்றவரையில், 1965, பெப்புருவரி 1 இல் இருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு கையளிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

8. பழைய கிராமப்பிரதேசத்தின் கிராமச் சபையின் முன்னைய ஊழியர்களுக்கும் இப்போதைய ஊழியர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காகப் பணம் உதவும். விடயத்தில் அதற்குள்ள பொறுப்புகள் பின்வருமாறு பகிரப்படவேண்டும் :—

(அ) பழைய கிராமப்பிரதேசத்தின் கிராமச் சபையால் இப்பொழுது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு, புதிய கிராமப் பிரதேசங்களொவ்வொன்றினதும் கிராமச் சபைகளான வாழைச்சேனைக்கும் ஓட்டைமாவடிக்குமிடையில் முறையே 9 : 16 விகிதத்தில் ;

(ஆ) பழைய கிராமச் சபையில் சேவை செய்தபின் வெளியே மாற்றப் பட்டிருக்கும் ஊழியர்களின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய கிராமப் பிரதேசங்களொவ்வொன்றினதும் கிராமச் சபைகளான வாழைச்சேனைக்கும் ஓட்டைமாவடிக்குமிடையில் முறையே 9 : 16 விகிதத்தில் ;

(இ) பழைய கிராமச் சபையில் இப்பொழுது சேவை செய்வோரின் உபகாரச் சம்பளங்களின் பொருட்டு புதிய கிராமப் பிரதேசங்களொவ்வொன்றினதும் கிராமச் சபைகளான வாழைச்சேனைக்கும் ஓட்டைமாவடிக்குமிடையில் முறையே 9 : 16 விகிதத்தில்.

9. இந்த அட்டவணையில்—
" புதிய கிராமச் சபை " என்பது, வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி, 1964, ஒகஸ்ட் 7 இன் 14,135 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் விபரிக்கப்படும் வாழைச்சேனைக் கிராமப் பிரதேசம் அல்லது ஓட்டைமாவடிக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும் ; " பழைய கிராமப் பிரதேசம் " என்பது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளை மத்திய கிராமப் பிரதேசம் எனப்பொருள்படும்.

3-497—11.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,686

---

## மன்னார் பட்டின சபை

### இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ், அதற்கான தக்க அதிகாரத் தாபனத்தால்' அதாவது மன்னார் பட்டினசபையினால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சருக்கு அப்பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு பெப்புருவரி மீ 22 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இறைச்சிக்காரர் கட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்கீழ் பிரசித்தப் படுத்தப்பட்டுள்ள பொது கொல்களம், சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அவரால் அதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட பொதுச் சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் தலைவரின் பணிப்புக்கமைய இருக்கும். அவ்வுத்தியோகத்தரே அக்கொல்களத்தினுள் ஒருக்காற்றுக்கும் சுகாதாரத்துக்கும் பொறுப்பாளியாவார்.

2. (1) எவரேனும் அக் கொல்களத்தில், எந்த விலங்கையும்—

(அ) அவ்விலங்கு, சௌக்கிய வைத்திய உத்தியோகத்தராலேனும், அதன் பொருட்டு தலைவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தராலேனும், பரிசோதிக்கப்பட்டு மனித உணவுக்காகக் கொல்லுதற்கு ஏற்றதென்று அவ்வுத்தியோகத்தரால் அங்கீகரிக்கப் பட்டாலன்றியும்,

(ஆ) எத்தினத்திலேனும், காலை 7 மணிக்கும் 9 மணிக்குமிடையேயன்றியும் கொல்லக்கூடாது.

எனினும், தலைவர் விசேடமான சூழ்நிலைகளில் இதில் சொல்லப்பட்டதல்லாத வேறு எவ்வேளையினும் எவ்விலங்கையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

(2) எவரேனும், அக்கொல்களத்தில், எந்த விலங்கையும்—

(அ) பந்தி (1) இன் கீழ் அவ்விலங்கு அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து முப்பது மணித்தியால நேரம் கழிந்த பின்னர் எந்நேரத்திலேனும், அல்லது

(ஆ) அது, பந்தி (1) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களத்திலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டிருப்பின் மீண்டும் அது பரிசோதிக்கப்பட்டு, மனித உணவுக்காகக் கொல்லுதற்கு ஏற்றதென அப்பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்டாலன்றிக் கொல்லக்கூடாது.

3. கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும், அவ்விலங்கு அவ்வளவில் நிற்கையில் அதற்குப் போதிய ஆகாரமும் நீரும் ஊட்டப்படுதற்குவேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

4. கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும், அவ்விலங்கு கொல்லுதற்குத் தகுதியற்றதென்று நிராகரிக்கப்பட்டால், அவ்விதம் நிராகரிக்கப்பட்டவுடனே அவ்விலங்கை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் அல்லது அப்புறப்படுத்துவிக்க வேண்டும்.

5. 2 ஆம் ஒழுங்குவிதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரும்' எவ்விலங்கையும் அது அவ் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனித உணவுக்காகக் கொல்லுவதற்குத் தகுதியற்றதாகக் காணப்பட்டால், அது கொல்லப்படுவதைத் தடை செய்யலாம்.

6. கொல்களத்தில் கொல்லப்பட்ட எந்த விலங்கினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனித உணவுக்குத் தகுதியற்றது என்று 2 ஆம் ஒழுங்கு விதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரும் அபிப்பிராயப்படுவாரேல் அவர் அவ்விறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடச் செய்தல்வேண்டும் அல்லது அந்த இறைச்சி அல்லது கழிவு இறைச்சியை விற்பதற்கு வைக்கப்படுவதனை அல்லது மனித உணவுக்கென உபயோகிக்கப்படுவதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் ஒழித்து விடச்செய்யவேண்டும்.

7. கொல்களத்தில் பொறுப்பு உத்தியோகத்தர், மனித உணவுக்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ஆம் ஒழுங்கு விதியின் ஏற்பாட்டின்படி கொல்லுவது தடுக்கப்பட்ட எவ்விலங்கையும் கொல்ல அனுமதித்தல் கூடாது.

8. (1) 2 ஆம் ஒழுங்கு விதியில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரதும் பணிப்புரையின் பேரிலன்றி, 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் மனித உணவுக்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ள இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தக்கூடாது.

(2) மனித உணவுக்கான எவ்விலங்கினதும் சடலத்தை, அச்சடலத்தின் முன்பாகத்திலும் பின்பாகத்திலும், கொல்களப் பொறுப்பு உத்தியோகத்தரால் " மன்னார் பட்டினசபை " என்னும் அடையாளமும், விடயத்துக்கேற்ப, " மாட்டிறைச்சி " அல்லது " ஆட்டிறைச்சி " என்னும் சொற்களும் முத்திரை குத்தப்பட்டிருந்தாலன்றி, கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தக்கூடாது.

9. ஒரு விலங்கு, வேறு எந்த விலங்கினதும் முன்னிலையில் அல்லது அவ்வளவில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சடலம் அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப் பட்டு அவ்வளவு சுத்தப்படுத்தப்படும் வரை கொல்லப்படலாகாது.

10. (1) இதில் இனிவரும் ஏற்பாட்டிற்கமைவாக, கொல்களத்தை உபயோகிப்பதற்கு அல்லது கொல்வதற்குக் கீழ்க்காணும் வீதங்களில் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும் :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒவ்வொரு கால்நடைக்கும் .. | 1 | 0 |
| ஒவ்வொரு செம்மறியாட்டிற்கும் அல்லது வெள்ளாட்டுக்கும் | 0 | 50 |

ஆனல் கொல்களத்திற்குள் கொண்டுவரப்படும் விலங்கு எதுவும் கொல்லுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் அல்லது கொல் லாது திருப்பிக்கொண்டுபோகப்பட்டால் அவ்விலங்கின் பொருட்டு விதிக் கப்படும் கட்டணம் 50 சதமாயிருக்கும்.

(2) பந்தி (1) இன் கீழ் அவ்விலங்கின் பொருட்டுச் செலுத்த வேண்டிய உரிய கட்டணம் சபைக்குச் செலுத்தப்பட்டு, அக்கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்று கொல்களக் காப்பாளருக்கே னும், அப்பற்றுச்சீட்டுக் காட்டப்படுவதற்குத் தலைவரால் எழுத்தில் நியமிக்கப்படும் வேறு உத்தியோகத்தர் எவருக்கேனும் காட்டப்பட்டால் அன்றிக் கொல்களத்தில் எவ்விலங்கையும் கொல்லவோ அல்லது கொல் களத்திலிருந்து எவ்விலங்கையும் அப்புறப்படுத்தவோ கூடாது.

11. கொல்களக் காப்பாளர், கொல்களத்தில் கொல்லப்பட்ட—

(அ) எல்லாக் கால்நடைகளினதும் பதிவேடு ஒன்றும் ;

(ஆ) எல்லா வெள்ளாடுகளினதும் செம்மறியாடுகளினதும் பதிவேடு ஒன்றும் வைத்திருக்க வேண்டும். இப்பதிவேடு பொருளளவில் கீழ்க் காணும் படிவத்தில் இருத்தல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| மாட்டின் பற்றுச் சீட்டு இலக்கம் | | |
| வர்ணனை | | |
| நிறம் | | |
| வயது | | |
| குறிசுட்ட அடையாளம் | வலப்பக்கம் | |
| | இடப்பக்கம் | |
| இறைச்சிக்காரன் பெயர் | | |
| தொழுவத்தினுள் வந்த நேரமும் தேதியும் | | |
| பரிசோதிக்கப்பட்ட தேதி | | |
| கொல்லப்பட்ட தேதி | | |
| கால் நடைகளை ஏற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத்தொப்பம் | | |
| குறிப்புக்கள் | | |

12. இவ் ஒழுங்கு விதிகளில் —

" தலைவர் " என்பது சபைத்தலைவர் எனப் பொருள்படும்.

" சபை " என்பது மன்னர் பட்டினசபை எனப் பொருள்படும்.

" சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் " என்பது மன்னர் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

" கட்டளைச் சட்டம் " என்பது (272 ம் அத்தியாயமான) இறைச்சிக் காரர் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

3-482—11.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,686

---

## மின்சாரச் சட்டம்

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்தோடு (205 ஆம் அத்தி யாயமான) மின்சாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின்கீழ், மட்டக்களப்பு மாவட்டத்து மண்முனை தென்கிழக்கு, எருவில் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ௵ ஜனவரி ௴ 22 ந் ௳.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

" சட்டம் " என்பது (205 ஆம் அத்தியாயமான) மின்சாரச் சட்டத்தைக் கருதுகின்றது ;

" உத்தரவுச்சீட்டு " என்பது சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ், மண்முனை தென்கிழக்கு, எருவில் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டைக் கருதுகின்றது ;

" உத்தரவு பெற்றவர் " என்பது மட்டக்களப்பு மாவட்டத்து மண்முனை தென்கிழக்கு, எருவில் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையைக் கருதுகின்றது.

2. உத்தரவு பெற்றவரிடமிருந்து மின்சக்தி உபயோகத்தைப் பெற விரும்பும் எவரும்—

(அ) விநியோகந் தேவைப்படும் தினத்துக்கு பதினைன்கு தினங்களுக் காவது முன்னர், உத்தரவு பெற்றவரால் அத்தேவைக்கெனத் தரப்படும் பத்திரத்தில், உத்தரவு பெற்றவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் ; இன்னும்

(ஆ) சேவை வடத்துக்கான கட்டணங்களை உத்தரவு பெற்றவருக்கு முதலில் கொடுக்க வேண்டும், அல்லது உத்தரவு பெற்றவர் அவ்விதம் கேட்பாராயின், சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் உத்தரவு பெற்றவரோடு எழுத்தில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

3. மின்சக்தி நுகருபவர் ஒவ்வொருவரும், உத்தரவுச் சீட்டில் குறிக்கப் பட்டுள்ள வீதங்களின்படி, அச்சக்திக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

4. (1) நுகருபவரின் வளவினுள்ள சேவைக்கம்பி வடத்தின் பாகம், மாற்றிகள், மூல உருக்கிகள், மானி, பலகை ஆகியன உத்தரவு பெற்ற வரின் சொத்தாக இருத்தல்வேண்டும் ; எக்காரணத்தை முன்னிட்டும், உத்தரவு பெற்றவரின் அதிகாரம் பெற்ற ஒரு பணியாளரல்லாத வேறு எவராலும் அவை அகற்றப்படவோ கையாளப்படவோ கூடாது.

(2) உத்தரவு பெற்றவரின் மூல உருகியில் அல்லது மானியிலிருந்து நுகருபவரின் பக்கத்திலுள்ள கம்பிகள், கம்பி வடங்கள் எவற்றினதும் அல்லது வேறு உபகரணம் எதனதும் பராமரிப்புக்கு நுகருபவரே பொறுப்பாவார்.

(3) சட்டத்தின் 47 (3) ஆம் பிரிவின்கீழ் எந்த அமைப்பும் தொடர் பற்றதாக்கப்பட்டிருந்து பின்னர் மீண்டும் இணைக்கப்படும்போது, அந்த அமைப்பைச் சோதித்தற்கும் மீள இணைப்பதற்கும் உரிய கட்டணம், உத்தரவுச்சீட்டில் விதிக்கப்பட்டிருக்கின்றபடி, நுகருபவரால் முதலில் கொடுக்கப்படவேண்டும்.

(4) நுகருபவர் எவரதும் கம்பிகளின் அல்லது இணைப்புகளின் எப்பாகத்திலும் மின்சக்தி வெளிப்படுதல் ஏற்படுமாயின், அந்த நுகரு பவரே அவரது வளவில் நுகரப்பட்டதாக மானி குறிக்கும் மின்சக்தியைத் துக்கும் பணம் கொடுக்கப்பாத்திரராவார்.

5. (1) தமது வளவுக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர் எச்சமயத் திலும், தற்காலிகமாகவேனும் நிரந்தரமாகவேனும், ஏற்கனவே உப யோகத்திலுள்ளதைக்காட்டிலும் பெரிய அளவினதான விளக்கு, விசிறி அல்லது மோட்டர் எதையும் உபயோகிக்கவோ, மின்சக்தி நுகரும் கூடுதலான விளக்கு அல்லது வேறு சாதனம் எதையும் அமைக்கவோ, அவ்வளவினுள்ள கம்பியமைப்பை எவ்வகையிலேனும் மாற்றவோ, நீட்டவோ விரும்பும் நுகருபவர் ஒவ்வொருவரும், அத்தகைய நீடிப்பு அல்லது மாற்ற வேலையைத் தொடங்குதற்கு இருதினங்களுக்காவது முன்னர், கம்பியிடும் ஒப்பந்தக்காரரின் பெயர், முகவரி பற்றிய விவரங் களோடு உத்தரவு பெற்றவருக்கு எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

(2) நுகருபவர் எவரும், ஏற்கனவே உபயோகத்திலுள்ளதைக் காட்டிலும் பெரிய அளவினதான நீடிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோட்டர் எதையுமேனும், மின் நுகரும் கூடுதலான விளக்கு அல்லது வேறு உபகரணம் எதையுமேனும், அந்த நீடிப்பு, விளக்கு, விசிறி, மோட்டர், கூடுதலான விளக்கு அல்லது வேறு உபகரணம், உத்தரவு பெற்றவரால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு உத்தி யோகத்தரால் பார்வையிடப்பட்டுச் சோதிக்கப்பட்டு திருப்தியானதாகக் காணப்பட்டாலன்றி, தற்காலிகமாகவேனும் நிரந்தரமாகவேனும் பிர தான அமைப்புடன் இணைக்கவேனும் இணைப்பிக்கவேனும், அமைக்க வேனும் கூடாது.

6. (1) எந்த வளவிலேனும் உத்தரவு பெற்றவரின் உருகி உருகு பட்சத்தில், நுகருபவர், விடயத்துக்கேற்ப, மின்சக்தி நிலையத்தின் அல்லது துணை நிலையத்தின் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அல்லது உத்தரவு பெற்றவருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

(2) உத்தரவு பெற்றவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் அல்லது உத்தரவு பெற்றவரால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள வேலையாள் எவரும் அல்லாத வேறு ஆள் எவரும் உத்தரவு பெற்றவரின் சொத்தாகிய உருகிய உருகி எதற்கும் பதிலானதிடக் கூடாது.

(3) நுகருபவரின் அல்லது உத்தரவு பெற்றவரின் சொத்தாகிய உருகி எதற்கும் பதிலானதிடுதற்கு உத்தரவு பெற்றவரின் உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் சேவை தேவைப்படுங்கால், உத்தரவுச் சீட்டில் குறித்துள்ளபடியான, அதன்பொருட்டுக் கொடுபடவேண்டிய உரிய கட்டணங்கள், நுகருபவரின் நிகழ்மாதக் கணக்கில் இடப்பட வேண்டும்.

7. மின்சக்தி வழங்கல் முற்றுகவோ பாகமாகவோ தடைப்படுவதால் நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் நுகருபவருக்கு நேரும் நட்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவு பெற்றவர் பொறுப்பாக மாட்டார்.

8. அமைப்பு எதுவும், சட்டத்தின் 45 ஆம் பிரிவின்கீழ் தொடர்பற்ற தாக்கப்பட்டிருந்து பின்னர் மீண்டும் இணைக்கப்படுங்கால், உத்தரவுச் சீட்டில் விதிக்கப்பட்டிருக்கின்றபடி, சோதிப்பதற்கும் மீள இணைப்பதற்கு மான ஒரு கட்டணம் விதிக்கப்பட்டு நுகருபவரால் முதலில் செலுத்தப்பட வேண்டும்.

9. (1) எல்லாக் கட்டணங்களும், கணக்குக் கொடுக்கப்படும் தேதியில் கொடுபடவேண்டியவையாகக் கருதப்படும்.

(2) ஒரு கணக்கின் செம்மைக்கு விரோதமான முறைப்பாடு எதுவும், கணக்குக் கொடுக்கப்பட்டபின்னர் ஒரு வாரத்துக்குள் செய்யப்பட்டாலன்றி உத்தரவு பெற்றவரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. (1) தமது வளவுக்கு மின்சக்தி விநியோகமொன்று தேவைப்படாத நுகருபவர் ஒவ்வொருவரும் உத்தரவு பெற்றவருக்கு, எழுத்து மூலம் மூன்று நாள் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(2) பந்தி (1) இல் சொல்லப்படும் அறிவித்தல் கொடுக்கப்படாவிடின், அவரது வளவிலுள்ள உத்தரவு பெற்றவரின் சாதனத்துக்கு நுகருபவர் பொறுப்பாளியாக்கப்படுவதுடன், நுகருபவருக்கு விநியோகந் தேவையில்லையென்பதைப்பற்றிய அறிவித்தல் உத்தரவு பெற்றவருக்குக் கிடைக்கும் தேதியிலிருந்து மூன்று தினங்கள் கழியும்வரை அவ்வளவில் நுகரப்படும் மின்சக்தியனைத்துக்கும் பணம் கொடுக்கவும் பாத்திரராவார்.

ஆயின், சொல்லப்பட்ட மூன்று தினங்கள் கழிவதற்கு முன்னர் அவ்வளவுக்கு மின்சக்தி வழங்குதல் உத்தரவுபெற்றவரால் நிறுத்தப்படின், அவ்விதம் நிறுத்தப்படும் நேரம்வரை அவ்வளவில் நுகரப்படும் மின்சக்திக்கு மட்டுமே பணம்கொடுப்பதற்கு நுகருபவர் பாத்திரராவார்.

11. நுகருபவர் எவரும்—

(1) அரசாங்க மின்சார முயற்சிகள் பகுதியின் பொது முகாமையாளரால் மின்சார வேலையை மேற்கொள்ளுதற்கு வேண்டிய திறமையுடையவரென உறுதிப்படுத்தப்பட்டிருப்பவரும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு மின்தொழிற் சாலையில் அல்லது தொழில் நிலயத்தில் குறைந்தபட்சம் மூன்று வருட கால செய்முறை அனுபவமுள்ளவரும்,

(2) இரண்டு வருடங்களுக்குக் குறையாத காலத்துக்கு மின்பொறியியற் சாதனையில் இரமமாக ஈடுபட்டுள்ளவருமான ஒருவரல்லாத வேறு எவரையும்—

(அ) உத்தரவு பெற்றவரின் மின் வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கப்பட விருப்பதும் நுகருபவரின் வளவு எதிலும் இருப்பதுமான புதிய அமைப்பு எதனதும் கம்பி அமைப்பு அல்லது மின்பொருத்திகள் அல்லது இணைப்புகள் சம்பந்தமான வேலை எதையும் செய்வதற்கேனும்,

(ஆ) நுகருபவரின் வளவு எதிலுமுள்ள அமைப்பு எதனதும் சம்பந்தமாக, அந்த அமைப்பு உத்தரவு பெற்றவரின் மின்வழங்கு மூலக்கம்பிகளோடு இணைக்கப்பட்ட பின்னர் கீழ்க்காணபனவற்றைச் செய்வதற்கேனும் வேலைக்கு அமர்த்தலாகாது :—

(i) அந்த அமைப்பை மாற்றும், சீராக்கும், நீடிக்கும் அல்லது திருத்தும் அல்லது இன்னோரன்ன தன்மையுள்ள மின்வேலை எதுவும் ; அல்லது

(ii) அந்த அமைப்பின் திறனையும் தன்மையையும் எவ்வகையிலும் மாற்றுதபடி அல்லது பாதிக்காதபடி விளக்குகள், விசிறிகள், ஆளிகள் அல்லது வேறு துணைப்பாகங்களின் சாதாரண பதிலிடுதலல்லாத பிற மின் வேலை எதுவும்.

12. (1) இருந்துவரும் அமைப்புகளைக் கூட்டுதல், மாற்றுதல், சீராக்குதல் உட்பட்ட அமைப்பு வேலை போன்ற மின்வேலை எதுவும் உத்தரவு பெற்றவரின் உத்தியோகத்தர் ஒருவர் உத்தேசித்துள்ள வேலையை பார்வையிடுதற்கேதுவாக, உத்தரவு பெற்றவருக்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, இணைக்கப்படலாகாது.

(2) அத்தகைய உத்தியோகத்தர் உத்தேசித்துள்ள வேலையை அங்கீகரிப்பாராயின், அவர் ஒப்பந்தகாரரோடு மானியின் தானத்தைத் தீர்மானிப்பார் ; அவ்வேலை சட்டத்தின் 60 ஆம் பிரிவின்கீழ் அதன்பொருட்டு ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமாக ஒப்பந்தகாரரால் செய்யப்படுதல் வேண்டும்.

13. (1) 12 ஆம் ஒழுங்குவிதியிற் சொல்லப்படும் மின்வேலை எதுவும் முற்றுப்பெற்றதும் உத்தரவு பெற்றவரால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் அவ்வேலையைப் பார்வையிட்டுச் சோதிப்பார், மேலும்—

(அ) அந்த அமைப்பு, விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இருக்கக்காணின், அந்த வளவுக்கு மின்சக்தி வழங்கப்படும் ; மேலும்

(ஆ) அந்த அமைப்பு விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமையாதிருப்பின், அந்த அமைப்பு அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஆக்கப்படும் காலம்வரை அந்த வளவுக்கு மின்சக்தி வழங்கப்படமாட்டாது.

(2) இவ்வொழுங்கு விதியின்கீழ் எந்த அமைப்பையும் பார்வையிட்டுச் சோதிப்பதற்கு கொடுபடவேண்டிய கட்டணம், நுகருபவரால், முதலிலேயே கொடுக்கப்படவேண்டும்.

14. எவ்வளவிலுமுள்ள புதிய அமைப்பு எதனோடும் இணைந்த மின்வேலை எதுவும், உத்தரவு பெற்றவருக்கு அறிவித்தல் கொடுக்காமலும் அதன் முன் அங்கீகாரம் பெறாமலும் செய்யப்படின், அந்த வேலை செய்யப்பட்டுள்ள வளவுக்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவு பெற்றவர் மறுக்கலாம் அல்லது உத்தரவு பெற்றவரால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அவசியமென்று கருதும் கம்பி அமைப்புத் திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்யுமாறு நுகருபவரைக் கேட்கலாம். அத்தகைய திருத்தங்களும் மாற்றங்களும் முறையாகச் செய்யப்படின், அந்த அமைப்பு அவ்வுத்தியோகத்தரால் மீளப் பார்வையிடவும் சோதிக்கவும் பட்டு சரியாக இருக்கக் காணப்படின், அந்த வளவுக்கு மின்சக்தி வழங்கப்படும்.

15. உத்தரவு பெற்றவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும் அன்னாரின் அனுமதியின்றியும் உத்தரவு பெற்றவரின் மின் வழங்கு மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள எந்த அமைப்பினதும் நீடிப்பு எதுவும் செய்யப்படுமிடத்து முழு அமைப்பும் உத்தரவு பெற்றவரின் மின்வழங்கு மூலக்கம்பிகளிலிருந்து தொடர்பற்றதாகப்படுதற்குரியதாகும்.

16. எந்த அமைப்பும் மீண்டும் இணைக்கப்படுதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவு பெற்றவரால் அதன் பொருட்டு தரப்படும் பத்திரத்தில் எழுதப்பட்டு, மின்சக்தி விநியோகம் தேவைப்படும் நேரத்துக்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்காவது முன்னர், உத்தரவு பெற்றவரின் கந்தோரில் ஒப்படைக்கப்படவேண்டும்.

3-495—11.3 66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,686

## இரத்தினபுரிக்கு ஒரு மாநகர சபை அமைத்தல்

இரத்தினபுரிப் பட்டணத்திற்கு ஒரு மாநகர சபை அமைப்பதற்கு உள்ளூர் ஆட்சி அமைச்சர் தீர்மானித்துள்ளார். எனவே, பின்வரும் விஷயங்களைப் பரிசீலனை செய்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி, அமைச்சர் அவர்கள், வழக்கறிஞர் திரு. எச். வணிகத்துங்கா அவர்களை நியமித்துள்ளார் :—

(அ) இந்நிலைவரத்தில், இரத்தினபுரிப் பட்டணத்திற்கு ஒரு மாநகர சபை அமைத்தல் பொது மக்களின் நன்மைக்கு அனுகூல மானதா ?

(ஆ) அனுகூலமானதாயின், இப்பொழுதுள்ள இரத்தினபுரி நகர சபையின் நிர்வாக எல்லைக்கு வெளியேயுள்ள விருத்தி பெற்ற ஏதாவது பகுதிகள் உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகர சபையுள் சேர்க்கப்படல் வேண்டுமா ?

(இ) உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகர சபையின் எல்லைகளின் வரை யறைகள்.

(ஈ) உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மாநகர சபையின் பிரதேசத்தின் எல்லை, சனத்தொகை, வேறும் தேவையான விபரங்களை ஆதாரமாகக் கொண்டு, புதிய மாநகரசபைக்கு எத்தனை அங்கத்தவர்கள் தேவை ? என்ற விஷயம்.

(உ) உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் ஒவ்வொரு வட்டாரத்தினதும் வரையறைகள்.

விசாரணைச் சபையின் அலுவல் நியதிகட்குட்பட்ட விஷயங்கள் எல்லா வற்றினுமாவது, சிலவற்றிலாவது, தமது அபிப்பிராயங்களையோ முறைப் பாடுகளையோ சமர்ப்பிக்க விரும்பும் பொதுமக்கள் அல்லது சபைகள், இந்த அறிவித்தல் கொடுக்கப்படுந் திகதியிலிருந்து, இரண்டு வாரங் கட்குள், எழுத்து மூலம், அவற்றைச் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரிக்கு தட்டெழுத்தில் பொறுக்கப்பட்ட 3 பிரதிகளுடன் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

பின்னால் அறிவிக்கப்படுந் திகதிகளில், இவ்விசாரணைச் சபையின் பகிரங்கக் கூட்டங்கள் நடைபெறும்.

எல். ஜீ. சிறிவர்த்தன,
(உள்ளூர் ஆட்சி உதவி அதிகாரி)
காரியதரிசி,
விசாரணைச் சபை.

உள்ளூர் ஆட்சி அலுவலகம்,
இரத்தினபுரி.

3-510—11.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,686

---

## துணைவிதிகள்

ஆர். ஸி.—வி 43/47.

### ஹப்புத்தளை நகரசபை

**நகரசபைக் கட்டளைச் சட்டம்**

(255 ம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழும் 157 ஆம் பிரிவின் கீழும் ஹப்புத்தளை நகர சபையால் ஆக்கப்பட்டு, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் கீழ் தமக்களிக் கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ௵ ஜனவரி ௴ 29 ந் உ.

**துணைவிதி**

பொதுச் சந்தை சம்பந்தமாக, ஹப்புத்தளை நகரசபையால் ஆக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டபடியான, 1948 ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 9,865 கொண்ட கசெற்றில் பிரசுரிக் கப்பட்ட துணைவிதிகள், அவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஆ என்னும் அட்ட வணைக்குப் பதிலாக, பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்த்துக் கொள்வதால் இத்தால் திருத்தப்பட்டுள்ளன :—

**அட்டவணை ஆ**

**விகிதங்கள்**

| அனுமதிச்சீட்டு | | வர்டகை அல்லது கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| (1) நிலையான சாலை .. | மாதமொன்றுக்கு | 10 00 |
| (2) ஹப்புத்தளை–பதுளை வீதிக்கு எதிரா யுள்ள பொதுச்சந்தையில் கீழ்த் தட்டிலுள்ள நிலையான சாலை .. | மாதமொன்றுக்கு | 50 00 |
| (3) ஒரு நாளுக்கு அல்லது அதன் பகுதிக்கு நிலையான சாலை .. | | 1 00 |
| (4) இருவாரங்கட்கு அல்லது அதிலொரு பகுதிக்குத் தற்காலிகமான சாலை.. | | 2 50 |
| (5) பொதுச்சந்தையில் (3 ச. அ. அல்லது அதற்குக் குறைந்த வெற்றுத்தரை இடம் .. | நாளொன்றுக்கு | 0 15 |

3–508—11.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14 686

---

### சங்கானைப் பட்டினசபை

**பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்**

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின்கீழ் சங்கானைப் பட்டினசபையால் ஆக்கப்பட்டு, அக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ௵ பெப்ருவரி ௴ 24 ந் உ.

**வாகன, மிருக வரி பற்றிய துணைவிதி**

1946 ஒக்டோபர் 4 ம் தேதிய 9,609 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட விதிகளின் 211 ஆம் விதியின்கீழ் கொடுக்கப்படுமாறு வேண்டப்பட்டுள்ள அட்டவணை அவ்விதிகள் சங்கானைப் பட்டின சபைக்கு ஏற்றனவாயிருக்குமளவில், கொடுக்கப்படவேண்டியதாயிருக்காது.

3-481—11.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,686

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

அட்டவணை—1966

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | 4. 3.66 | வெள்ளி | 25. 2.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 3.66 | வெள்ளி | 4. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 3.66 | வெள்ளி | 11. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 3.66 | வெள்ளி | 17. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| **ஏப்பிறல்** | 1. 4.66 | வெள்ளி | 25. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 7. 4.66 | வியாழன் | 31. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 15. 4.66 | வெள்ளி | 1. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22. 4.66 | வெள்ளி | 15. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29. 4.66 | வெள்ளி | 22. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **மே** | 6. 5.66 | வெள்ளி | 26. 4.66 | செவ்வாய் | நண்பகல் | 12 |
| | 13. 5.66 | வெள்ளி | 6. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20. 5.66 | வெள்ளி | 13. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27. 5.66 | வெள்ளி | 20. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **யூன்** | 3. 6.66 | வெள்ளி | 25. 5.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 9. 6.66 | வியாழன் | 1. 6.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 16. 6.66 | வியாழன் | 9. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 24. 6.66 | வெள்ளி | 16. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **யூலை** | 1. 7.66 | வெள்ளி | 24. 6.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 8. 7.66 | வெள்ளி | 1. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 15. 7.66 | வெள்ளி | 8. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 22. 7.66 | வெள்ளி | 14. 7.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 29. 7.66 | வெள்ளி | 22. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஓகத்து** | 5. 8.66 | வெள்ளி | 29. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12. 8.66 | வெள்ளி | 5. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19. 8.66 | வெள்ளி | 12. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26. 8.66 | வெள்ளி | 19. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** | 2. 9.66 | வெள்ளி | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒக்ரோபர்** | 7.10.66 | வெள்ளி | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **நவெம்பர்** | 3.11.66 | வியாழன் | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| **திசெம்பர்** | 2.12.66 | வெள்ளி | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ௵ பெப்புருவரி ௴ 11 ந் உ.

**பேர்னுட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.